**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

**நாள்: 24.11.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 12 (LW17)

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவானந்தம் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது SP பட்டிணம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.நான் ஏற்கனவே திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது, கடந்த 19.11.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த கடவுச்சீட்டினை பெற்றுக்கொண்டு, அவர் கொடுத்த துரித தபாலை கனம் JM திருவாடானை அவர்களிடம் மதியம் 01.45 மணிக்கு தபாலை ஒப்படைத்தேன். அதன்பிறகு திருவாடானை உட்கோட்டம், காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்தில் தபாலை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.24 15:28:05 +0530

ஒப்படைத்தேன். அதன்பிறகு இராமநாதபுரம் சென்று, SP Camp அலுவலகத்தில் ஒரு தபாலை ஒப்படைத்தேன். மேற்படி துரித தபால் ஆனது குற்ற எண்.196/2021, பிரிவு 302 இதச வழக்கில் பதிவு செய்யப்பட்ட அசல் முதல் தகவல் அறிக்கை ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

திருப்பாலைக்குடி காவல் நிலையத்திலிருந்து திருவாடானை நீதிமன்றம் சுமார் 20–25 கிமீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 கிமீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து திருவாடானை நீதிமன்றத்திற்கு 1 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் இரு சக்கர வாகனத்தில் சென்றால் 1 மணி நேரத்தில் சென்றுவிடலாம். எனக்கு கொடுத்த கடவுச்சீட்டினை என்னை போலிசார் விசாரித்தபோது நான் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.

காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.24 15:28:08 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .